Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 12

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. பின்வருவனவற்றுள் ஆய்தக்குறுக்கச் சொல்லாக அமையாதது
   1.அ∴றிணை 2. மு∴டீது 3. ப∴றொடை 4. அ∴து
2. ஓடினான் என்ற வினைச்சொல்லில் காலம் காட்டும் உறுப்பு
   1. விகுதி 2. பகுதி 3. இடைநிலை 4. சாரியை
3. பெயர்ச்சொல்லின் பண்பு அல்லாதது
   1. எண்ணடைகளை ஏற்கும் 3. வேற்றுமை உருபு ஏற்கும்
   2. காலங்காட்டும் 4. அடைகளை ஏற்கும்
4. 'இவன் பெரியன்' என்ற தொடரில் பெரியன் என்னும் சொல்
   1. குறிப்பு வினை 3. தெரிநிலை வினை
   2. பெயர்ச்சொல் 4. எச்சவினை
5. 'இவர்களுள் இவளே அழகியவள்' என்ற தொடரில் 'ஏ'கார இடைச்சொல் பெற்றுவந்த பொருள்
   1. முற்று 2. எச்சம் 3. பிரிநிலை 4.ஈற்றசை
6. பின்வரும் வினைகளுள் எச்சமாகவும், முற்றாகவும் அமையும் சொல்
   1. பாடிய 2. பாடும் 3. பாடி 4. பாடிக்கொண்டு
7. 'வரகு'என்னும் குற்றியலுகரச் சொல்
   1. நெடிற்றொடர்க்குற்றியலுகரம் 3. வன்தொடர் குற்றியலுகரம்
   2. இடைத்தொடர் குற்றியலுகரம் 4. உயிர்த்தொடர் குற்றியலுகரம்
8. கருங்குழலி என்பது
   1. வினைத்தொகை 2. பண்புத்தொகை 3. வேற்றுமைத்தொகை 4. அன்மொழித்தொகை
9. படிக்கின்றாள் என்ற பகுபதத்தின் உறுப்புக்கள்
   1. பகுதி, விகுதி 3. பகுதி, விகுதி, இடைநிலை
   2. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை 4. பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி
10. வினைப்பகாப்பதமாயும், இடைப்பகாப்பதமாயும் அமையும் சொல்
    1. கொல் 2. படி 3. கொலை 4. மாட்டு

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கு விடை விடை எழுதுக

1. தச்சன் செய்த சிறுமா வையம் என்ற குறுந்தொகைப்பாடலை பாடிய புலவர் யார்? அப்பாடலின் திணை துறை என்பவற்றை குறிப்பிடுக.
2. மேற்குறித்த குறுந்தொகைப்பாடலில் தலைவியின் ஊடல் தோழியால் எவ்விதம் வெளிக்காட்டப்படுகின்றது?
3. "இனிநினைந்திரக்கமாகின்று" என்ற புறநானூற்றுச்செய்யுளின் திணை துறை என்பவற்றை குறிப்பிடுக
4. "இனிநினைந்திரக்கமாகின்று" என்ற புறநானூற்றுச்செய்யுளில் முதியவர் ஒருவர் தனது கடந்துபோன இளமையை எண்ணி எவ்விதம் வருந்துகின்றார்?
5. அச்செய்யுளின் முதுமையின் இயல்புகளாக எவை எடுத்துக்காட்டப்படுகின்றன?